உங்கள் பகுதி நிகழ்ச்சிகளை செய்தியாக வெளியிட கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்புங்கள்
7401 22 4449

# செஞ்சி G டைம்ஸ்

வார இதழ்
GINGEE TIMES
Weekly Sunday
Volume.1, Issue.3 Jan 11 - 17, 2026 8 Pages
PRGI Regd. No. TNTAM/25/A4736 Free Circulation

விளம்பரம் செய்ய அணுகவும்
7401224449

Contact: 7401224449 e-mail: gingeetimes@gmail.com website: gingeetimes.com / Gingee Times

## ஆவண எழுத்தர் உதவியின்றி நேரடியாக பத்திரம் பதியலாம்

தமிழகத்தில் ஆவண எழுத்தர் உதவியின்றி பொதுமக்கள் தாங்களாகவே சொத்து பத்திரங்களை தயாரித்து பதிவு செய்யலாம் என பதிவுத்துறை தெரிவித்துள்ளது.

ஆவண எழுத்தர் வாயிலாக சென்றால்தான் பத்திரப் பதிவு நடக்கும் என்ற தவறான கருத்து மக்களிடம் இருக்கிறது. பதிவுத் துறை இணையத்தில் மாதிரி பத்திரங்கள் இடம்பெற்று உள்ளன. இதை பின்பற்றி ஆவண எழுத்தர் உதவியின்றி பொதுமக்களே நேரடியாக பத்திரங்களை தயார் செய்யலாம்.

இந்த பத்திரங்களை சார் பதிவாளர்கள் 100 சதவீதம் ஏற்றுக் கொள்வார்கள். புதிய நடைமுறையால் தேவையற்ற செலவுகளை குறைக்க முடியும் என்று பதிவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



செஞ்சி டைம்ஸ் வார இதழ் வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.



ரெட்டணை அரசு மேல்நிலைப் பள்ளி

# பிளஸ் 1 மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி

## செஞ்சி எம்எல்ஏ மஸ்தான் வழங்கினார்




**திண்டிவனம்:** விழுப்புரம் மாவட்டம் ரெட்டணை அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படிக்கும் 111 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப் பட்டன. மயிலம் ஒன்றியக்குழுத் தலைவர் யோகேசுவரி மணிமாறன் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் குமுதா ரமேஷ், ஒன்றியக்குழு உறுப்பினர் ராஜ்பரத் முன்னிலை வகித்தனர். பள்ளித் தலைமையாசிரியர் கலையரசன் வரவேற்றார்.

முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்எல்ஏ சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, 111 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கிப் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏ மாசிலாமணி, மயிலம் வடக்கு ஒன்றியச் செயலர் மணிமாறன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் வெங்கடாசலம், நிர்வாகிகள் தீவனூர் சேகர், சண்முகம், செந்தில்குமார், சுப்பிரமணியன், பழனி, கன்னியப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். உதவித் தலைமையாசிரியர் பாலசுந்தரம் நன்றி கூறினார்.

# அதிமுக-பாமக கூட்டணி அறிவிப்பு: தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



**செஞ்சி:** தேசிய ஜனநாயக கூட்டணியை சேர்ந்த அதிமுக மற்றும் பாமக இடையே கூட்டணி அறிவிக்கப்பட்டதையடுத்து இருகட்சி தொண்டர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி நான்கு முனை சந்திப்பில் அதிமுக, பாமக, பாஜக ஆகிய கட்சிகளின் சார்பில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

செஞ்சி நகர அதிமுக செயலாளர் சுந்தர்ராஜன், பாமக மாநில இளைஞர் சங்க துணை தலைவர் அருண்மொழி தேவன், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மாவட்ட பொதுசெயலாளர் அன்பழகன், ஆகியோர் தலைமையில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

அதிமுக மாவட்ட எம்ஜிஆர் மன்ற நிர்வாகி கண்ணன், தொகுதி செயலாளர் வழக்கறிஞர் வேலவன், பாமக நிர்வாகிகள் ஒன்றிய செயலாளர்கள் திருமலை, ஆப்செட் முருகன், மாவட்ட வன்னியர் சங்க அமைப்பு தலைவர் செஞ்சி அய்யனார், பாஜக நிர்வாகிகள் ஊடகப்பிரிவு கோபி, பாட்டாளி உதயா, மாவட்டத் துணைத் தலைவர் ஏழுமலை, ஒன்றிய தலைவர் தாராசிங், மாவட்ட பொருளாதார பிரிவு தலைவர் தங்கராமு உள்ளிட்ட கூட்டணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# வாழ்வியல் முறையை மாற்றினால் நோயற்ற வாழ்வு வாழலாம்: சித்த மருத்துவ அதிகாரி அறிவுரை





**செஞ்சி:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை சார்பில் அகத்தியர் பிறந்த தினத்தையொட்டி 9 வது சித்த மருத்துவ தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளி தலைமையாசிரியர் ராமசாமி தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாணிக்கம் முன்னிலை வகித்தார் .

சிறப்பு அழைப்பாளர்களாக செஞ்சி அரசு மருத்துவமனை சித்த மருத்துவ அலுவலர் டாக்டர். அஜித்தா ரமேஷ் பாபு மற்றும் டாக்டர். சுமதி சிறப்புரையாற்றினர். டாக்டர் அஜித்தா ரமேஷ் பேசும்போது,

உலகளாவிய மருத்துவத்தில் நமது இந்திய சித்த மருத்துவம் என்றும் சிறப்பு பெற்றுள்ளது. மேலும் காலை முதல் இரவு வரை நமது வாழ்வியல் முறையை கடைப்பிடித்தால் நோயற்ற வாழ்க்கை வாழலாம். குறிப்பாக அதிகாலை எழுதல், யோகாசனம், உடற்பயிற்சி, நல்ல உணவுகள் உண்ணுதல், போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும் துரித உணவுகள் சாப்பிடகூடாது. ஆரோக்கியமான தின்பண்டங்கள் சாப்பிட வேண்டும் என்றார். மேலும் அன்றாடம் பயன்படுத்தும் மூலிகை செடிகளின் பயன்கள் பற்றி மாணவர்களுக்கு அவர் விளக்கமளித்தார். நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஏழுமலை ஆசிரியர்கள் செந்தில், பாலா, வடிவேல் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

செஞ்சி டைம்ஸ்
வார இதழ் ஞாயிறு தோறும்
இலவசமாக விநியோகிக்கப்படும்

விளம்பரம்
செய்ய
அணுகவும்
7401224449

Readers are recommended to make appropriate enquires before entering into deals with advertisers who advertise in this publication. The Editor and Publisher do not vouch for any claims made by advertisers and hence shall not be held liable for any adverse consequences.

செஞ்சி அருகே

# வராக நதியில் ரூ.8 கோடியில் தடுப்பணை பணிகள் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



**செஞ்சி:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல்களவாய் ஊராட்சியில் வராக நதி ஆற்றின் குறுக்கே ரூ.8 கோடியே 8 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தடுப்பணை பணிகளை ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். பின்னர் அவர் கூறியதாவது:

மேல்களவாய் ஊராட்சியில் வராக நதியின் குறுக்கே ரூ 8 கோடியே 8.20 லட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்பட்டு வருகிறது. இந்தபணியை நேரில் பார்வையிட்டுஆய்வு செய்யப்பட்டது. இந்த தடுப்பணை அமைப்பதன் மூலம் மேல்களவாய் மற்றும் அதனைச் சுற்றி உள்ள கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். இதனால் 153 கிணறுகள் மூலம் 241.25 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும். மேலும், இந்த தடுப்பணையின் நீளம் 130.00 மீட்டராகும். தடுப்பணையின் 90 சதவீதம் பணிகள் முடிந்த நிலையில், மீதமுள்ள பணிகளை விரைவில் முடிக்க நீர் வளத் துறை பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என்றார்.

அப்போது நீர்வளத் துறை செயற்பொறியாளர் அருணகிரி, உதவி செயற் பொறியாளர் அய்யப்பன், உதவி பொறியாளர் தெரெசா ரூபவ், செஞ்சி வருவாய் வட்டாட்சியர் துரைசெல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

உங்கள் பகுதி நிகழ்ச்சிகளை செய்தியாக வெளியிட கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்புங்கள்

74012 24449



**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை அடுத்த பொன்னேரி பாடியநல்லூரிலிருந்து காணொலி காட்சி வாயிலாக "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தினை துவக்கி வைத்ததை தொடர்ந்து, விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான மகளிர் குழு தன்னார்வலர்களுக்கு உபகரணங்கள் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, செஞ்சி மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் லட்சுமணன், அன்னியூர் சிவா, சிவக்குமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) செந்தில்வடிவு, மாவட்ட செயல் அலுவலர் ராசாத்தி உட்பட பலர் உள்ளனர்.**

## வினாடிக்கு 3.1 குவாட்ரில்லியன் கணக்கீடு

# சென்னை ஐஐடியில் பரம்சக்தி சூப்பர் கம்ப்யூட்டர் அறிமுகம்

சென்னை: இந்தியாவின் தொழில்நுட்பத் திறனை உலகத் தரத்திற்கு உயர்த்தும் வகையில், சென்னை ஐஐடியில் பரம் சக்தி என்ற அடுத்த தலைமுறை சூப்பர் கம்ப்யூட்டிங் வசதியை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அதிகார பூர்வமாகத் தொடங்கியுள்ளது.

கடந்த ஜனவரி 8ம்தேதி நடைபெற்ற இந்த விழாவில், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் கிருஷ்ணன் அதிநவீன கம்ப்யூட்டரை தொடங்கி வைத்தார். இது ஆத்மநிர்பர் இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக, முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பரம் சக்தி சூப்பர் கம்ப்யூட்டர் 3.1 பெட்டாபிளாப்ஸ் வேகத்தில் இயங்கும் திறன் கொண்டது. அதாவது, இது ஒரு வினாடிக்கு 3.1 குவாட்ரில்லியன் கணக்கீடுகளைச் செய்யும் வலிமை வாய்ந்தது. சிடாக் நிறுவனத்தின் ருத்ரா தொடர் சர்வர்களைக் கொண்டு இது கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த சூப்பர் கம்ப்யூட்டர் வசதி விண்வெளி பொறியியல், காலநிலை ஆய்வு, மருந்து கண்டுபிடிப்பு மற்றும் மேம்பட்ட உற்பத்தித் துறைகளில் சிக்கலான அறிவியல் சவால்களைத் தீர்க்கப் பெரிதும் உதவும்.இது இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புச் சூழலை உலக அளவில் வலுப்படுத்தும். தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷன் கீழ் இதுவரை இந்தியா முழுவதும் 37 சூப்பர் கம்ப்யூட்டர்கள் நிறுவப்பட்டுள்ளன. பெங்களூருவில் இந்தியாவின் மிகப்பெரிய சூப்பர் கம்ப்யூட்டர் அமைப்பை உருவாக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பரம் சக்தி போன்ற உள்நாட்டுத் தயாரிப்புகள் வெளிநாட்டுத் தொழில் நுட்பங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, இந்தியாவை உலகளாவிய தொழில்நுட்ப மையமாக மாற்றும் நோக்கில் செயல்படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் எக்ஸாஸ்கேல் அளவிலான கணினித் திறனை அடைவதே இந்தியாவின் அடுத்த இலக்காக உள்ளது என்று தொடக்க விழாவில் தெரிவிக்கப்பட்டது.

# செஞ்சி செக்கோவர் நிறுவனம் சார்பில் குழந்தைகள் உரிமை பொங்கல் கொண்டாட்டம்



**செஞ்சி** : செஞ்சி செக்கோவர் நிறுவனத்தின் சார்பாக மாபெரும் குழந்தைகள் உரிமைகள் பொங்கல் கொண்டாட்டம் நடைபெற்றது. இதையொட்டி செஞ்சி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து பேரணியாக திருவண்ணாமலை சாலை வழியாக வள்ளி அண்ணாமலை மண்டபத்தின் வழியாக பீரங்கிமேடு எம்ஜிஆர் நகர் மந்தவெளி வரை குழந்தைகள் உரிமை பேரணி நடைபெற்றது. இதில் கோஷங்களை முழங்கியும் குழந்தைகள் பாதுகாப்பு அம்சங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தியும் பேரணி நடைபெற்றது. இப்பேரணியை துணை வட்டாட்சியர் அக்தர் ஜெகன் , போக்குவரத்து காவல்துறை உதவி ஆய்வாளர் துரைராஜ் , வருவாய் ஆய்வாளர் கண்ணன்,செஞ்சி செக்கோவார் இயக்குனர் அம்பிகா சூசைராஜ், காவல் உதவி ஆய்வாளர் ஆனந்தன் ஆகியோர் துவக்கி வைத்தனர்

மந்தவெளியில் சிறப்பான பொங்கல் திருவிழா நடைபெற்றது. இதில் தீயணைப்பு துறை நிலைய அலுவலர் ராதாகிருஷ்ணன், இளங்கோவன், மகிமை ராஜா குமார் (சிறப்பு உதவி ஆய்வாளர்) மற்றும் பாலாஜி ரோமியோ ஆகியோர் குத்துவிளக்கேற்றி 'பொங்கலை துவக்கி வைத்தனர். விழாவில் குழந்தைகளுக்கு உரியடி நடத்தப்பட்டது . தடாகம், நல்லான்பிள்ளை பெற்றாள், மேல் பாப்பாப்பாடி, ஆலம்பூண்டி, செவலப்பரை, கவரை, காரை உள்ளிட்ட கிராமங்களில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்டோர் பேர் கலந்து கொண்டனர்.

எங்களது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துகள்

முன்பதிவு நடைபெறுகிறது முந்துகள் உங்கள் மனைக்கு

ஸ்ரீ திரௌபதியம்மன் துணை

G.K ரியல் எஸ்டேட்-ன்

அரசு அங்கீகாரம் பெற்றது : DTCP No :143/2025 RERA அனுமதி பெற்றது.

# ஸ்ரீ ஜெய் மாருதி நகர்

## கொள்ளார் ( வேம்பூண்டி கிராமம் ) சிப்காட் அருகில்

## திண்டிவனம் To செஞ்சி சாலை

1 சதுரஅடி ரூ. ~~700~~/-முதல் இப்பொழுது

## திறப்பு விழாவை முன்னிட்டு

# 1 சதுரஅடி ரூ.500/-மட்டுமே

...மனைப்பிரிவின் சிறப்பு அம்சங்கள்...

- இந்த நகர் திண்டிவனம் நகராட்சிக்கு மிக அருகில் அமைந்துள்ளது.
- இந்த நகர் அருகில் PV பாலிடெக்னிக் கல்லூரி அமைந்துள்ளது.
- 500 மீட்டரில் அருகில் சிப்காட் கம்பெனி அமைந்துள்ளது.
- இந்த நகரில் 33, 30, 24 அடி அகலம் கொண்ட சாலையாக அமைந்துள்ளது.
- ஆஞ்சநேயர் கோவில் பின்புறம் அமைந்துள்ளது.
- இந்த நகரில் அனைத்தும் தார் சாலையாக அமைய உள்ளது.
- நகரின் எல்லா மனைகளும் 24 X 50, 20 X 60, சதுரஅடியில் அமைந்துள்ளது.

இச்சலுகை : 14.12.2025 முதல் 14.01.2026 வரை முழுப்பணம் செலுத்துபவர்களுக்கு

## பத்திரப்பதிவு முற்றிலும் இலவசம்! இலவசம்!!

மனைப்பிரிவில் அலுவலகம் செயல்படுகிறது.

விபரங்களுக்கு அணுகவும் :

G.K.ரியல் எஸ்டேட் & ஸ்ரீபாலாஜீ சூப்பர் மார்க்கெட்

நெ.79,காந்தி பஜார்,செஞ்சி

9994953565, 9585122122, 9442719051


ஸ்ரீதீபசக்தி
டிஜிட்டல் ஸ்டுடியோ
5D போட்டோஸ்
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
கலர் பாஸ்போர்ட்
1
நிமிடத்தில் எடுத்து தரப்படும்
சுப நிகழ்ச்சிகளுக்கு போட்டோ மற்றும் வீடியோ
சிறந்த முறையில் எடுத்துத் தரப்படும்.
திண்டிவனம் சாலை, (சப் ரிஜிஸ்டர் ஆபீஸ் அருகில்) செஞ்சி.
செல்: 9942093310


HAPPY NEW YEAR 2026
பொங்கல்
மெகா ஆஃபர்..!
EICHER 380
45 HP CAT 4WD
₹ 8,49,999 /-*
FESTIVAL MEGA OFFER
ஹூக் பெட்
9 கொத்துக் கலப்பை
டாப்
36 பிளேடு ரோட்டவேட்டர்
முற்றிலும்
இலவசம்..!
சிறப்பம்சங்கள்:
» சிம்ப்சன் வாட்டர் கூல்டு இன்ஜின்
» சிலிண்டர்: 3
» கியூபிக் கேபாசிட்டி : 2500cc (2.5L)
» பவர் ஸ்டியரிங்
» கிளட்ச் டைப் : டூயல்
» கிளட்ச் வகை : 8F + 2R
*நிபந்தனைக்கு உட்பட்டது.
*எக்சேஸ்சேரிசுக்கு பொருந்தாது.
SRI KUMARAN MOTORS
ஸ்ரீ குமரன் மோட்டார்ஸ்
செஞ்சி, வந்தவாசி, செய்யாறு
95002 54296
88072 76106


Mob : 9789720717
திவ்யா
ஃபேஷன் ஸ்டுடியோ
* குர்திஸ் * சுடிதார் * சேலைகள் * உள்பாவாடைகள்
* லெக்கிங்ஸ் * டாப்ஸ் * பிளவுசுகள் * நைட்டீஸ்
10% தள்ளுபடி
ஜனவரி 10 முதல் 20 வரை
* செட்டிநாடு படவைகள்
* கைத்தறிப் படவைகள்
* டிஷ்யூ படவைகள்
* லினன் படவைகள்
* ஃபேன்சி படவைகள்
* கலம்காரி படவைகள்
* ஜார்ஜெட் படவைகள்
* பூனம் படவைகள்
* சந்தேரி படவைகள்
* பட்டுப் படவைகள்
* காதிப் படவைகள்
* கோட்டா டோரியா படவைகள்
SCAN FOR LOCATION
@DIVYAFASHIONSTUDIO
சர்வே எண். 7/1, நல்லத்தூர் கிராமம்,
111வது கிமீ - திருச்சி சென்னை NH, (திண்டிவனம் A2B அருகில்)
திண்டிவனம் (TK), விழுப்புரம் (மாவட்டம்), பின்கோடு: 604305


Mob : 9789720717
DIVYA
FASHION STUDIO
* Kurtis * Chudidhars * Sarees * Skirts
* Leggings * Tops * Blouses * Nighties
DISCOUNT 10% JANUARY 10 to 20
* Chettinad Sarees
* Cotton Sarees
* Handloom Sarees
* Tissue Sarees
* Linen Sarees
* Fancy Sarees
* Kalamkari Sarees Silk & Cotton
* Georgette Sarees
* Poonam Sarees
* Chanderi Sarees
* Silk Sarees
* Silk Cotton Sarees
* Khadi Cotton Sarees
* Kotta Doriya Cotton Sarees
SCAN FOR LOCATION
@DIVYAFASHIONSTUDIO
Survey No. 7/1, Nallathur Village,
111th Km - Trichy Chennai NH, (Near Tindivanam A2B)
Tindivanam (TK), Villupuram (Dist). Pincode : 604305.

# ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டத்தால் தமிழ்நாடு தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாறும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு




**பொன்னேரி:** திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பாடிய நல்லூரில், தமிழ்நாடு அரசின் “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தின் தொடக்கவிழா ஜனவரி 9ம்தேதி நடந்தது. இந்த திட்டத்தை தொடக்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

”மற்ற மாநிலங்களை பார்த்தீர்கள் என்றால், பெரும்பாலும், தலைநகரமும் முதல் நிலை நகரங்களும்தான் வளர்ந்திருக்கும். ஆனால், தமிழ்நாட்டில் தான் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களும் வளர்ந்திருக்கிறது! எல்லாவற்றிற்கும் மேல் சமூகநீதி அரசை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்..நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது, கொரோனா என்ற கொடுமையான பாதிப்பு உச்சத்தில் இருந்தது. எதற்குமே ஒத்துழைக்காத, தமிழ்நாட்டிற்கும், தமிழர்களுக்கும் எதிராக மட்டுமே சிந்தித்து செயல்படும் பா.ஜ.க. அரசு தொடர்ந்து மத்திய அரசில் இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்நாட்டு உரிமைகளை எல்லாம், ஆமாம் சாமி போட்டு அடகு வைத்த அ.தி.மு.க. இப்போது எதிர்க்கட்சியான பிறகு, உண்மைக்கு புறம்பான போலி செய்திகளை உருவாக்கி, அவதூறு பரப்பிகொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிற்கும், மத்திய அரசிற்கும் பாலமாக இருக்க வேண்டிய ஆளுநர், உங்களின் எண்ணங்களை பிரதிபலித்து, சட்டமன்றத்தில் நிறைவேற்றும் சட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறார். இத்தனையும் மீறி, மக்களான நீங்கள் எங்கள் கூடவே இருப்பதால்தான், 2021இல் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம்.. மத்திய அரசே நிதி தர மறுத்து புறக்கணித்தாலும், அவர்கள் வெளியிடும் புள்ளிவிவரங் களில் எல்லாம் தவிர்க்கவே முடியாத அளவிற்கு முதலிடத்தில் இருக்கும் சாதனையை செய்தது, நம்முடைய திராவிட மாடல் அரசு.

இப்போது உங்களுடைய கனவுகளை நீங்களே சொல்ல வேண்டும் என்று உருவாக்கியிருப்பதுதான், இந்த ‘உங்க கனவ சொல்லுங்க’திட்டம். இன்றிலிருந்து முப்பது நாள்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து குடும்பங்களையும், அரசின் சார்பாக தன்னார்வலர்களாக நியமிக்கப்படுகின்ற எங்கள் டீமை சேர்ந்தவர்கள் உங்களை சந்திப்பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளை சொல்லுங்கள்.. அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டிற்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன். நான் உறுதியாக சொல்கிறேன். இந்த கனவுகளை எல்லாம் நான் நிறைவேற்றி காட்டும்போது, கிராமப்புற உள்கட்டமைப்புகள், நகர்ப்புற உள்கட்டமைப்புகள், கல்வி மற்றும் திறன் மேம்பாடுகள், சமூகங்களின் வளர்ச்சி, விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில், வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்சாலைகள் ஆகிய ஏழு துறைகளில், தன்னிறைவு பெற்ற தமிழ்நாடாக நம்முடைய மாநிலம் வளர்ந்திருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

விளம்பரம் செய்ய அணுகவும்
7401224449

# தேமுதிக இடம்பெறும் கூட்டணியே தமிழகத்தில் ஆட்சி அமைக்கும்

## வேப்பூர் மாநாட்டில் பிரேமலதா பேச்சு



**கடலூர்:** கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த பாசார் கிராமத்தில் தேமுதிக மண்டல மாநாடு நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா பேசுகையில், “கட்சியின் ரகசியங்களை மகனிடம் கூட சொல்லாமல், ஒரு நேர்மையான பொதுச் செயலாளராக நான் இருப்பேன். யாருடன் கூட்டணி என்ற முடிவு எடுத்தாகி விட்டது. ஆனால், அதை இந்த மாநாட்டில் அறிவிக்க வேண்டுமா? என்பதுதான் கேள்வி.

ஏனென்றால், தமிழகத்தில் எந்தக் கட்சியும் கூட்டணி குறித்து அறிவிக்கவில்லை. இவர்கள்தான் எங்கள் கூட்டணி என்று யாரும் சொல்லவில்லை. அப்படியிருக்கையில், நாமும் சிறிது ஆலோசித்து, தெளிவாகச் சிந்தித்து, நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

தை பிறந்தால் வழி பிறக்கும். இவ்வளவு நாள் சத்திரியர்களாக வாழ்ந்து விட்டோம்; இனிமேல் சாணக்கியர்களாக வாழ வேண்டும்.. இன்று ஆண்ட மற்றும் ஆளும் கட்சிகளுமே யாருடன் கூட்டணி என்று அறிவிக்காதபோது, , மத்தியில், மாநிலத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் சொல்லாதபோது நாம் மட்டும் ஏன் அவசரப்பட வேண்டும்.

ஆனால், தேமுதிக சாதாரண கட்சி அல்ல. நமக்கென்று கௌரவம், மரியாதை, கண்ணியம் உண்டு. அவற்றையெல்லாம் யார் மதிக்கிறார்களோ அவர்களுடன்தான்; என் தொண்டர்களை யார் மதிக்கிறார்களோ அவர்களுடன்தான் கூட்டணி.

இவ்வளவு நாள்கள் காத்திருந்தோம். தெளிவாகச் சிந்தித்து, ஒரு மகத்தான கூட்டணியை உங்கள் ஒப்புதலுடன் நாம் அறிவிப்போம். ஆனால், நாம் யாருடன் கூட்டணி வைக்கிறோமோ அவர்கள்தான் ஆட்சியமைப்பார்கள் என்று தெரிவித்தார்.

# செஞ்சி தொகுதி விசிக மாவட்ட செயலாளருக்கு நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு



**செஞ்சி:** விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரு மான தொல் திருமாவளவன் செஞ்சி சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளராக செஞ்சி சிவாவை அறிவித்தார். இதையடுத்து செஞ்சி சட்டமன்ற தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் செஞ்சி நான்கு முனை சந்திப்பில் மாவட்ட செயலாளர் செஞ்சி சிவாவிற்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னதாக செஞ்சி பயணியர் விடுதியில் இருந்து ஊர்வலமாக வந்து செஞ்சி நான்குமுனை சந்திப்பில் வைக்கபட்டிருந்த புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி வீரவணக்கம் செலுத்தினார். அப்பொழுது தொண்டர்கள் கிரேன்மூலம் விசிக மாவட்ட செயலாளருக்கு பெரிய மாலை அணிவித்தனர்

இந்நிகழ்வில் ஆரணி மண்டல செயலாளர் வழக்கறிஞர் நன்மாறன், மண்டல துணை செயலாளர் தனஞ் செழியன், உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் மழைமேனி பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் ராசாராமன், தவசீலன் திருநாவுக்கரசு, ஜெயராஜ், நகர பொருளாளர் வழக்கறிஞர் காமராஜ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, முகாம் நிர்வாகி கள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

# நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கம் சார்பில் களப்பணி, நன்கொடையாளர்களுக்கு பாராட்டு விழா




**செஞ்சி:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தனியார் திருமண மண்டபத்தில் நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் மற்றும் 2025 ஆம் ஆண்டு களப்பணி மற்றும் நன்கொடையாளர் களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் சுரேஷ் ரவிச்சந்திரன் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி மாநில சபாநாயகர் ஏம்பலம் செல்வம், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ,விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நந்தன் கால்வாய் களப்பணி மற்றும் நன்கொடையாளர்களுக்கு கேடயம் வழங்கி பாராட்டு தெரிவித்து சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், முன்னாள் சேர்மன் ரங்கநாதன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி, உதவி செயற்பொறியாளர் ஐயப்பன், நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள் சேகர் , சந்தானம், புஷ்பா, சேகர், கார்வண்ணன், ஜோலாதாஸ், முருகன், ஆதிசங்கர், கார்த்திகேயன், மணி கன்னிகா ரமேஷ்பாபு மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

QR Code Scan செய்து செஞ்சி டைம்ஸ் வாட்ஸ்அப் சேனலில் இன்றே இணைந்திடுங்கள்

Gingee Times
WhatsApp channel

விளம்பரம் செய்ய அணுகவும்
7401224449

டிஜிட்டல் போதைக்கு முடிவுகட்ட

# தினமும் 2 மணிநேரம் டிவி, செல்போனுக்கு பயன்படுத்த தடை

**பெங்களூரு:** அந்தகாலத்துல புத்தகமும், விளையாட்டுமான இருந்த குழந்தைகள் இப்போது செல்போனே கதி என கிடக்கின்றனர். இல்லேன்னா டிவியில் கார்ட்டூர் சேனர் பார்ப்பதில் மூழ்கி விடுகின்றனர். வன்முறைக்கு வித்திடும் வீடியோ கேம்களும் குழந்தைகளின் மனநிலையை வெகுவாக பாதித்து வருகிறது.

குழந்தைகளின் டிஜிட்டல் போதை பெரும் பிரச்னையாக உருவெடுத்து வரும் நிலையில் அதற்கு முடிவு கட்ட ஒற்றைப்புள்ளி வைத்துள்ள கர்நாடகா மாநிலத்தில் உள்ள ஒரு கிராமம். அதாவது பெற்றோர்களும் குழந்தைகளும் தினமும் மாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை செல்போன் பார்க்கக்கூடாது, மேலும் டிவியும் பார்க்கக்கூடாது என ஊர் மக்கள் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

அந்த கிராமத்தின் பெயர் ஹலகா. இங்கு 8500 பேர் வசித்து வருகின்றனர். கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த கிராம மக்கள் டிவி, செல்போனால் குழந்தைகள் பாதிக்கப்படுவதை தடுக்க ஒரு முயற்சியை தொடங்கி உள்ளனர். கடந்த டிசம்பர் 17 முதல் டிஜிட்டல் போதைக்கு எதிரான போர் தொடங்கி உள்ளது. ‘மகாராஷ்டிராவில் உள்ள மொஹித்யாஞ்சே வாட்கான் என்ற கிராமத்திலும் இதுபோன்ற முயற்சியை அக்கிராமத்தினர் எடுத்துள்ளனர். அதனை பின்பற்றி ஹாலகா கிராமத்திலும் செயல்படுத்தி உள்ளனர்.

இந்த முயற்சியின்படி, ஹலகா கிராமத்தில் ஒவ்வொரு நாளும் இரவு 7 மணிக்கு அனைத்து வீடுகளும் தங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மொபைல் போன்களை அணைக்க வேண்டும். இந்த உத்தரவு பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க கிராம பஞ்சாயத்து






உறுப்பினர்கள் அந்தப் பகுதியில் ரோந்து செல்வார்கள்.

ஹாலகா கிராம பஞ்சாயத்துத் தலைவர் லட்சுமி ராஜு கஜபதி இதுபற்றி கூறும்போது, குழந்தைகள் மொபைல் போன்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதே இந்த முயற்சியின் நோக்கம்.. “உலகம் முழுவதும், டிஜிட்டல் போதை குழந்தைகளை எவ்வாறு கெடுக்கிறது என்பதை நாங்கள் தினமும் கேள்விப்பட்டு வருகிறோம். மோஹித்யாஞ்சே வட்கானின் உதாரணத்தைப் பின்பற்றி இதைச் செய்ய முடிவு செய்தோம் என்றார்.

மேலும் அவர் கூறும்போது, “அனைத்து பெற்றோர்களும் குழந்தைகளும் மாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மொபைல் போன்கள் மற்றும் தொலைக்காட்சிகள் உள்ளிட்ட கேஜெட்களிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். குழந்தைகளைப் படிக்க வைப்பதே எங்கள் முக்கிய நோக்கம், மேலும் பெற்றோரும் இதில் ஈடுபட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். குழந்தைகள் படிக்க விரும்பவில்லை என்றால், அவர்கள் வீட்டிலோ அல்லது வெளியிலோ தங்கள் நண்பர்களுடன் விளையாடலாம், ஆனால் டிஜிட்டல் கேஜெட்களை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும் என்றார்.

## கவனச்சிதறல் ஏற்படுத்தும் செல்போன்

குழந்தைகள் மொபைல் போன்கள் மற்றும் இணையதள வசதி உள்ள பிற சாதனங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் 2022 இல் நடத்திய ஆய்வின்படி, 23.80 சதவீத குழந்தைகள் தூங்குவதற்கு முன் படுக்கையில் ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்து கிறார்கள், இது வயதுக்கு ஏற ஏற அதிகரிக்கிறது. மேலும், 37.15 சதவீத குழந்தைகளுக்கு ஸ்மார்ட்போன் பயன்படுத்துவதால் கவனச்சிதறல் ஏற்படுகிறது என்பது தெரியவருகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஹாலகா கிராம மக்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக இந்த செல்போன், டிவி பயன்பாட்டு நேரக்குறைப்பை தொடங்கி உள்ளனர்.




Printed, Published and Owned by Saravanan, Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kitabath khan Bhadur Street, Ellies Road, Chennai-600002,.
Published from No.4, Senbaga Street, Thiruvalluvar Nagar, Tindivanam-604001. Editor: Saravanan